# COVID-19 சமயத்தில் ஓர் பொறுப்பான விளையாட்டு

## நமது சமூகத்தை ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வைக்கிறது.

மக்களின் ஆரோக்கியமும் பாதுகாப்பும் முக்கியமானது. எந்த விளையாட்டு அல்லது பரிசையும்விட இவை மிக முக்கியமானது.

மக்களை COVID-19 இடமிருந்து பத்திரப்படுத்த, எவெரெட், ஃபெடரல் வே, ஸ்போகான், வான்கூவர் மற்றும் யகிமாவில் உள்ள எங்கள் பிராந்திய அலுவலகங்களை நாங்கள் மூடியுள்ளோம். மேலும் எங்களது விமான நிலைய மற்றும் பல்முனை விற்பனைமையக் (mall) கடைகளையும் மற்றும் ஒலிம்பியாவில் உள்ள பிரதான லாட்டரி அலுவலகத்தையும் நாங்கள் மூடியுள்ளோம். இது தற்காலிகமானது மட்டுமே.

இருந்தும் உங்களால் லாட்டரி விளையாட முடியும். நீங்கள் கடைகளிலும் விற்பனை எந்திரங்களிலும் சீட்டுகளை வாங்கமுடியும். வேறு பொருட்கள் வாங்கும்போது மட்டுமே நீங்கள் சீட்டுகளை வாங்கவேண்டும்.

வெற்றியாளர்கள் தங்கள் பரிசுகளை பாதுகாப்பாகக் கோரமுடியும். $600 க்குக் கீழ் பெற்றுள்ள வெற்றியாளர்கள் தங்கள் பரிசை லாட்டரி சீட்டுகள் விற்கும் கடைகளில் பெற்றுக்கொள்ளலாம். $601 முதல் $100,000 உள்ள பரிசுகளுக்கு, வெற்றியாளர்கள் வெற்றிபெற்ற சீட்டுகளை லாட்டருக்கு அஞ்சல் செய்யவேண்டும். எப்படி சீட்டுகளை அஞ்சல் செய்வது என்ற விபரம் கீழேயும் எங்கள் இணையதளத்திலும் உள்ளது. அனுப்பும்முன் அனைத்து சீட்டுகளிலும் நீங்கள் கையொப்பமிடவேண்டும். $100,000 அல்லது அதிகம் வென்ற வெற்றியாளர்கள் லாட்டரி தலைமை அலுவலகத்தை அழைத்து ஒலிம்பியாவில் உள்ள பிரதான அலுவலகத்துக்கு வந்து பரிசைப் பெறுவதற்கு நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

Washington's Lottery (வாஷிங்டனின் லாட்டரி) விளையாடுவதற்கு நன்றி. வாஷிங்டன் மாகாணத்தில் COVID-19 பாதிப்பு பற்றிய மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து Department of Health -ன் இணையதளத்துக்கு வருகைதரவும்.

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் 03.26.20 அன்று புதுப்பிக்கப்பட்டது

**நீங்கள் ஏன் உங்கள் அலுவலகங்களை மூடுகிறீர்கள்?**
Washington's Lottery (வாஷிங்டனின் லாட்டரி) பொதுமக்கள் மற்றும் தனது பணியாளர்களின் பாதுகாப்பைப் பேண தனது அலுவலகங்களை மூடியுள்ளது. நாங்கள் எங்களது விமான நிலைய மற்றும் பல்முனை விற்பனைமையக் கடைகளையும், அனைத்து பிராந்திய அலுவலகங்கள் (எவெரெட், ஃபெடரல் வே, ஸ்போகான், வான்கூவர் மற்றும் யகிமா) மற்றும் ஒலிம்பியாவிலுள்ள பிரதான லாட்டரி அலுவலகத்தையும் மூடியுள்ளோம். இது தற்காலிகமானது மட்டுமே.

**இதற்கு அர்த்தம் Washington's Lottery (வாஷிங்டன் லாட்டரி) நிறுத்தப்படப் போகிறதா?**
இல்லை. நாங்கள் இப்போதும் பணியாற்றிக்கொண்டும் அனைத்து விளையாட்டுகளுக்குமான சீட்டுகளை விற்றுக்கொண்டும் இருக்கிறோம். குலுக்கல்கள் வழக்கம்போல நடக்கின்றன.

**அனைத்து அலுவலகங்களும் மூடப்படுமா?**
அனைத்து பிராந்திய அலுவலகங்கள், பல்முனை விற்பனைமையக் கடைகள் மற்றும் விமான நிலையக் கடைகள் மூடப்பட்டுள்ளன. ஒலிம்பியாவிலுள்ள பிரதான லாட்டரி அலுவலகம் அழைப்புகள் மற்றும் அஞ்சலுக்கு மட்டுமே. பொதுமக்களுக்கு மூடப்பட்டிருக்கும்.

**எந்த சேவைகளை நான் பெறமுடியும்?**
மூடப்பட்டிருக்கும்போது பிராந்திய அலுவலகங்கள் எந்தச் சேவைகளையும் அளிக்காது. விளையாடுவோர் லாட்டரியின் அலைபேசி செயலியை மற்றும் இணையதளத்தை சீட்டுகளை சோதிக்கவும் மற்றும் லாட்டரி சீட்டுகளை விற்கும் கடைகளைக் கண்டறியவும் பயன்படுத்தலாம். சில கடைகள் அவர்களது வேலை நேரத்தை மாற்றியுள்ளனர். எனவே விளையாடுவோர் கடைகளின் வேலை நேரத்தை சரிபார்த்துக் கொள்ளவும். நீங்கள் உணவு மற்றும் எரிபொருள் போன்ற பொருட்களை வாங்கும்போது மட்டுமே சீட்டுகளை வாங்கவோ அல்லது மீட்கவோ வேண்டும். பெரும்பாலான கடைகள் இன்னும் சீட்டுகளை விற்கவும் சோதிக்கவும் செய்வதோடு $600 அல்லது அதற்குக் குறைவாக வெற்றிபெற்ற சீட்டுகளுக்கு பணம் செலுத்துகிறார்கள்.

**லாட்டரி இன்னும் குலுக்கல்களை நடத்துகிறதா?**
ஆம். தற்போதைய ஜாக்பாட்கள், வெற்றிபெறும் எண்கள் மற்றும் குலுக்கல் தேதிகளை எங்களது அலைபேசி செயலி அல்லது இணையதளத்தில் பார்க்கலாம்.

**விளையாட்டுகள் அல்லது குலுக்கல் நேரங்களில் ஏதேனும் மாற்றம் உள்ளதா?**
இப்போதைக்கு, எந்த மாற்றங்களும் இல்லை.

**எவ்வளவு விரைவாக வெற்றியாளர்கள் தங்களது பரிசுகளைப் பெறமுடியும்?**
லாட்டரி கடைகள் $600 அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள வெற்றிபெற்ற சீட்டுகளுக்கு தொகையை அளிக்கின்றன. எப்போதும் போல, கடைகள் இந்த சீட்டுகளுக்கு உடனடியாக செலுத்துகின்றன. விளையாடுவோர் $601 முதல் $100,000 வரையிலான வெற்றிபெற்ற சீட்டுகளுக்கான தொகையை அஞ்சம் மூலம் கோரலாம். $100,000 அல்லது அதிகம் வென்ற வெற்றியாளர்கள் ஒலிம்பியாவில் உள்ள பிரதான லாட்டரி தலைமை அலுவலகத்தை அழைத்து நேரடியாக பரிசைப் பெறுவதற்கு நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும். வெற்றியாளர்கள் பரிசைப் பெற 180 நாட்கள் அவகாசம் உண்டு. வெற்றியாளர்கள் சீட்டின் பின்புறம் கையொப்பமிட்டு எங்கள் பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்படும்வரை சீட்டை பத்திரமான இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

**விளையாடுபவர் கடையினால் செலுத்த முடியாத ஒரு பரிசை வென்றால் என்ன நடக்கும்?**
அஞ்சலில் அனுப்பப்பட்ட வெற்றிபெற்ற சீட்டுகளை ஒலிம்பியாவில் உள்ள லாட்டரி அலுவலகம் கையாளும். வெற்றியாளர்கள் சீட்டின் பின்புறம் கையொப்பமிட்டு பின்புறம் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். வெற்றியாளர்கள் பரிசைப் பெற 180 நாட்கள் அவகாசம் உண்டு. வெற்றியாளர்கள் சீட்டின் பின்புறம் கையொப்பமிட்டு எங்கள் பிராந்திய அலுவலகங்கள் திறக்கப்படும்வரை சீட்டை பத்திரமான இடத்தில் வைத்திருக்க வேண்டும். $100,000 அல்லது அதிகம் வென்ற வெற்றியாளர்கள் ஒலிம்பியாவில் உள்ள பிரதான லாட்டரி தலைமை அலுவலகத்தை அழைத்து நேரடியாக பரிசைப் பெறுவதற்கு நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

**வெற்றிபெற்ற சீட்டினை அஞ்சல் செய்யும் வழிமுறைகள் என்ன?**
வெற்றியாளர்கள் சீட்டின் பின்புறம் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும். சீட்டுகளை அஞ்சல் செய்யவேண்டிய முகவரி: Washington Lottery Headquarters, P.O. Box 43050, Olympia, WA 98504-3050. 180 நாள் காலக்கெடுவுக்கு முன்பாக லாட்டரிக்கு சீட்டை அனுப்பவேண்டும். காலக்கெடு முடியும் நேரத்தில் சீட்டை அஞ்சல் செய்வது சரியாய் இருக்காது.

**சான்றளிக்கப்பட்ட அஞ்சலில் எனது சீட்டை நான் அஞ்சல் செய்யலாமா?**
நீங்கள் உங்கள் சீட்டை சான்றளிக்கப்பட்ட அஞ்சலில் அனுப்பலாம், ஆனால் அது அவசியமில்லை. வெற்றியாளர்கள் அஞ்சல் அனுப்பும்முன் அவர்களது சீட்டில் கையொப்பமிட்டு பின்புறத்தை நிரப்பவேண்டும்.

**எனது சீட்டை அஞ்சல் அனுப்பும் முன்பாக நான் படமெடுத்துக்கொள்ள வேண்டுமா?**
நீங்கள் விரும்பினால் உங்கள் வெற்றிபெற்ற சீட்டை ஒரு படம் எடுத்துக்கொள்ளலாம். பரிசை வெல்ல உங்களிடம் உண்மையான சீட்டு இருக்கவேண்டும்.

**எனது வெற்றிபெற்ற சீட்டை நான் அஞ்சல் செய்தால், உடனடியாக எனது பரிசு அனுப்பப்படுமா? அல்லது நான் நீங்கள் திறக்கும்வரை காத்திருக்க வேண்டுமா?**
நாங்கள் வெற்றிபெற்ற சீட்டுகளை அஞ்சலில் செயல்முறைப்படுத்துகிறோம். அதில் மாற்றமில்லை.

**வெற்றிபெற்ற சீட்டுக்கு பரிசுபெற காலக்கெடு உள்ளதா?**
ஆம். லாட்டரி குலுக்கல் தேதியிலிருந்து (குலுக்கல் விளையாட்டுகளுக்கு) அல்லது விளையாட்டு முடிந்ததிலிருந்து ( *தேய்ப்பு* சீட்டுகளுக்கு) 180 நாட்களுக்குள் வெற்றிபெற்ற சீட்டுகளைப் பெறவேண்டும்.

**என்னிடம் 180 நாட்கள் ஆகாத வெற்றிபெற்ற சீட்டு இருந்து, ஆனால் நீங்கள் அஞ்சலைத் திறக்க 180 நாட்கள் அல்லது அதற்குமேல் ஆனால் என்ன ஆகும்?**
காலக்கெடுவுக்கு முன்பாக லாட்டரி வெற்றிபெற்ற சீட்டுகளைப் பெறவேண்டும். காலக்கெடு நெருங்கும்போது, பல விளையாட்டாளர்கள் ஓரிரவு அல்லது அதேநாள் அஞ்சல் சேவைகளைப் பயன்படுத்துகிறார்கள்.

**நீங்கள் 180 நாள் காலக்கெடுவை நீட்டிக்கிறீர்களா?**
இந்த மாற்றத்துக்கு அவசர விதிகள் தேவைப்படும். நாங்கள் வெற்றிபெற்ற சீட்டுகளுக்கு அஞ்சல்வழி பணம் செலுத்துவதால், 180 நாள் காலக்கெடுவை நாங்கள் நீட்டிக்கவில்லை. இந்த முடிவை நாங்கள் பின்னர் மாற்றக்கூடும்.

**லாட்டரி விற்பனை எந்திரங்களை நீங்கள் எவ்வாறு சுத்தப்படுத்துகிறீர்கள்?**
கடைகள் லாட்டரி விற்பனை எந்திரங்களை சுத்தப்படுத்த வேண்டும். லாட்டரி பணியாளர்களும் சீட்டுகளை மாற்றும்போது விற்பனை எந்திரங்களை சுத்தம் செய்கிறார்கள்.

**WA Lottery அலைபேசி செயலி தொடர்ந்து செயலில் வேலை செய்தபடி தவறாமல் புதுப்பிக்கப்படுகிறதா?**
ஆம். செயலி இப்போதும் வேலைசெய்கிறது.

**செயலில் பரிசுகளுக்கு நான் புள்ளிகளை ஈட்டமுடியுமா?**
ஆம். உங்களால் பரிசுகளுக்கான புள்ளிகளை ஈட்டவும் மீட்கவும் முடியும்.

**செயலியில் இப்போதும் நான் வெற்றிபெற்ற சீட்டுகளை சரிபார்க்க முடியுமா?**
ஆம். உங்களால் WA Lottery அலைபேசி செயலியைப் பயன்படுத்தி இப்போதும் சோதிக்கமுடியும்.